## கழக மறுசீரமைப்பு

# தலைமைக் கழகப் பிரதிநிதிகள்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

**சென்னை, செப். 01–**

**கழக மறுசீரமைப்பு பிரதிநிதிகள் குறித்து நேற்று (31.08.2026) தலைமைக் கழகம் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:**

கழக தலைமைச் செயற்குழு கூட்டத்தில் இயற்றப்பட்ட தீர்மானத்தின்படி, கழகத் தலைவர் அவர்கள் 110 கழக மாவட்டங்களை அறிவித்துள்ளார்.

கழக சீரமைப்புக்குழு வகுத்துத் தந்த வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி பகுதி – நகரம் – ஒன்றியம் – பேரூர் – வட்ட – கிளைக் கழகங்களை மறுசீரமைத்து, தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்கும் பணியை நேரடியாக மேற்பார்வையிடுவதற்காக ஒரு வருவாய் மாவட்டத்திற்கு இருவர் வீதம் 76 தலைமைக் கழகப் பிரதிநிதிகள் நியமனம் செய்யப்படுகின்றனர்.

மாவட்டக் கழகச் செயலாளர்கள் நடத்தும் மாவட்டச் செயற்குழு கூட்டங்கள் அனைத்தும் தலைமைக் கழகப் பிரதிநிதிகள் முன்னிலையில் நடத்தப்பட வேண்டும். பகுதி – நகரம் – ஒன்றியம் – பேரூர் – வட்ட – கிளைக் கழகங்கள் மறுசீரமைப்பில் ஏதேனும் கருத்துகள், மாறுபாடுகள் இருப்பின் கழகத்தினர் தமது மாவட்டத்திற்குரிய தலைமைக் கழகப் பிரதிநிதிகளிடம் தெரிவிக்கலாம்.

**தலைமைக் கழகப் பிரதிநிதிகளுடன் கழகத் தலைவர் நாளை ஆலோசனை!**

தலைமைக் கழகப் பிரதிநிதிகளுடன், வரும் புதன்கிழமை (செப்டம்பர் 02, 2026) நாளை கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் மாலை 5 மணியளவில் காணொலிக் கூட்டம் நடைபெறும். மாவட்டச் செயற்குழுக் கூட்டம் சட்டப்பேரவை நடைபெறாத நாட்களில் நடத்தும்படிக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

| வ. எண் | மாவட்டம் | தலைமைக் கழக பிரதிநிதிகள் |
|---|---|---|
| 1 | திருவள்ளூர் | திரு. அன்னியூர் சிவா |
| | | திரு. ப. அப்துல் மாலிக் |
| 2 | சென்னை | திரு. பேரா. ஜெ. காண்ஸ்டண்டைன் ரவீந்திரன் எம்.பி. |
| | | திரு. ஆஸ்டின் எம்.எல்.ஏ |
| 3 | செங்கல்பட்டு | திரு. அண்ணாதுரை எம்.பி |
| | | திரு. கோவி.லெனின் |
| 4 | காஞ்சிபுரம் | திரு. என். மருது கணேஷ் |
| | | திருமதி. கே. ராணி ரவிச்சந்திரன் |
| 5 | ராணிப்பேட்டை | திரு. டி.செங்குட்டுவன் |
| | | வழக்கறிஞர் திரு. அ. சரவணன் |
| 6 | வேலூர் | திரு. இ.கருணாநிதி |
| | | திரு. ப. தாயகம் கவி |
| 7 | திருப்பத்தூர் | திரு. வே. கௌதமன் |
| | | வி.மு.விஜய கதிரவன் |
| 8 | திருவண்ணாமலை | திரு. சி.வி.எம்.பி.எழிலரசன் |
| | | டாக்டர் பி.எம். யாழினி |
| 9 | விழுப்புரம் | புதுச்சேரி திரு. சிவா |
| | | திருமதி. ஜெ.வீரமணி |
| 10 | கள்ளக்குறிச்சி | திரு .ஆர். டிஅரசு |
| | | திரு. கே.பி.சங்கர் |
| 11 | கிருஷ்ணகிரி | திரு. ஆ.கிருஷ்ணசாமி |
| | | திருமதி.நாமக்கல் ப. ராணி |
| 12 | தருமபுரி | திரு. பார் இளங்கோவன் |
| | | திரு. ஜெயராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ., |
| 13 | சேலம் | திரு. இரா. கிரிராஜன் |
| | | திரு. அழகிரி சதாசிவம் |
| 14 | நாமக்கல் | டாக்டர் ஆர். கோகுல்கிருபாசங்கர் |
| | | திரு. திருப்பத்தூர் நல்லதம்பி |
| 15 | ஈரோடு | திரு. சபாபதி மோகன் |
| | | திரு. உடுமலை ஜெயகுமார் எம்.எல்.ஏ., |
| 16 | திருப்பூர் | திரு. கே.ஈ.பிரகாஷ் |
| | | திரு. இசை |
| 17 | நீலகிரி | வழக்கறிஞர் திரு. இரா. ராஜீவ்காந்தி |
| | | திரு. வி.சி.சந்திரகுமார் |
| 18 | கோயமுத்தூர் | திரு. எஸ்.ஆர்.பார்த்திபன் |
| | | திருமதி. ஜெ. ரேகா பிரியதர்ஷினி |
| 19 | கரூர் | திரு. தி.அ. முகம்மது சகி |
| | | திரு. பெரம்பலூர் பிரபாகரன் |

| வ. எண் | மாவட்டம் | தலைமைக் கழக பிரதிநிதிகள் |
|---|---|---|
| 20 | திருச்சிராப்பள்ளி | திரு. வ.வேலுசாமி |
| | | திரு. வேடசந்தூர் சாமிநாதன் எம்.எல்.ஏ., |
| 21 | பெரம்பலூர் | திருமதி. அஞ்சுகம் பூபதி |
| | | திரு. முத்துவேல் ராமசாமி |
| 22 | அரியலூர் | திரு. சபா ராஜேந்திரன் |
| | | திரு. அம்பேத்குமார் எம்.எல்.ஏ., |
| 23 | கடலூர் | திரு. கலாநிதி வீராசாமி எம்.பி., |
| | | திரு. பரிதி இளம்சுருதி |
| 24 | மயிலாடுதுறை | திரு. கோவி.செழியன் |
| | | திரு. துரை கி சரவணன் |
| 25 | நாகப்பட்டினம் | திரு. பி.எஸ்.சீனிவாசன் எம்.எல்.ஏ., |
| | | திரு. இளமகிழன் |
| 26 | தஞ்சாவூர் | திரு. ஜி.பி.ராஜா |
| | | திருமதி. மாலதி நாராயணசாமி |
| 27 | திருவாரூர் | திரு. இள.புகழேந்தி |
| | | திரு. தமிழன் பிரசன்னா |
| 28 | புதுக்கோட்டை | திரு. ஏ.கே.எஸ்.விஜயன் |
| | | திரு. மதுரை பாலா |
| 29 | திண்டுக்கல் | திரு. செல்வம் எம்.பி |
| | | திரு. பிரபு கஜேந்திரன் |
| 30 | சிவகங்கை | திரு. இளையராஜா (இளைஞரணி) |
| | | திரு. தங்கபாண்டியன் (ராஜபாளையம்) |
| 31 | மதுரை | பி.டி.சி. செல்வராஜ் |
| | | வழக்கறிஞர் திரு. ரவீந்திரன் |
| 32 | தேனி | திரு. சுபா சந்திரசேகர் |
| | | டாக்டர் ஏ. கே. தருண் விஸ்வநாதன் |
| 33 | விருதுநகர் | திரு. கலை கதிரவன் எம்.எல்.ஏ., |
| | | திரு. இன்பா ரகு |
| 34 | இராமநாதபுரம் | திருமதி. ஹெலன் டேவிட்சன் |
| | | திரு. ஜெகன் பெரியசாமி |
| 35 | தூத்துக்குடி | திரு. நல்ல சேதுபதி |
| | | திரு. தாமரைபாரதி |
| 36 | திருநெல்வேலி | திரு. முத்துராஜா எம்.எல்.ஏ., |
| | | திரு. ஜோயல் |
| 37 | தென்காசி | திரு. ஞானதிரவியம் |
| | | திரு. வ.து.ந.ஆனந்த் |
| 38 | கன்னியாகுமரி | திரு. மார்கண்டேயன் எம்.எல்.ஏ., |
| | | திரு. மாலைராஜா |

இவ்வாறு தலைமைக்கழகம் அறிவித்துள்ளது.

# ரேஷன் அரிசியில் கை வைத்தால் த.வெ.க. அரசின் கதை முடிந்தது!

## விஜய் அரசுக்கு சி.பி.எம். மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் எச்சரிக்கை!

திருத்தணி, செப்.1-

ரேஷனில் அரிசி சரியில்லை என்று இந்த திட்டத்தை கைவிடும் நோக்கில் செயல்பட்டால் த.வெ.க. அரசின் கதை முடிந்துவிடும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் சண்முகம் எச்சரித்துள்ளார்.

திருத்தணி அருகே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மக்கள் சந்திப்பு பிரச்சார இயக்க நிறைவு பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு பேசிய சண்முகம், ரேஷன் அரிசி ஆடு,மாடுகளுக்கு தீவனமாக பயன்படுத்தப்படுவதாக த.வெ.க. அமைச்சர்கள் பேசியதற்கு சண்முகம் கண்டனம் தெரிவித்தார். ரேஷனில் அரிசி சரியில்லை என்று இந்த திட்டத்தை கைவிடும் நோக்கில் செயல்பட்டால் த.வெ.க. அரசின் கதை முடிந்துவிடும் என்றும் எச்சரித்த அவர்,

லட்சக்கணக்கான மக்களின் உயிரை ரேஷன் அரிசி காப்பாற்றிக் கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

# த.வெ.க. ஆட்சியில் தண்ணீர் இன்றித் தவிக்கும் தமிழ்நாடு!

## குடிநீர் கேட்டு காலிக்குடங்களுடன் பொதுமக்கள் சாலை மறியல்!

செங்கல்பட்டு, செப்.1-

த.வெ.க. ஆட்சியில் தமிழ்நாடு முழுவதும் தண்ணீர் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது. மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் குடிநீர் கேட்டு பொதுமக்கள் காலிக் குடங்களுடன் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அருகே உள்ள அரைப்பாக்கம் கிராமத்தில் சுமார் 500க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். இங்கு கடந்த சில நாட்களாக முறையாக குடிநீர் வராததால் பொதுமக்கள் 5 கிலோமீட்டர் தூரம் சென்று தண்ணீர் எடுத்து வரும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இதனால் வேலைக்கு செல்வோர், பள்ளி, கல்லூரி செல்வோர் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர். இந்நிலையில், முறையாக குடிநீர் வழங்காத த.வெ.க. அரசைக் கண்டித்து, அரைப்பாக்கம் கிராம மக்கள், மேலவேலம்பேட்டை திருக்கழுக் குன்றம் மாநில நெடுஞ்சாலையில் சாலை மறியலில் ஈடுபட்டனர். இதனால் அங்கு போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.